1987 மே 4]

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பேருந்து பழுதடைந்து இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்குப் பதிலாக, புதிய பேருந்து ஏதேனும் வாங்கிக் கொடுப்பதற்கு அரசு இந்த ஆண்டு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இவ்வாண்டு அதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

கன்னியாகுமரி தொகுதியில் மூலிகைப் பண்ணை

569—(*வினா எண் 7605) **திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி தொகுதியில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் ஆரம்பிக்க திட்டமிடப்பட்ட மூலிகைப் பண்ணை என்ன நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மூலிகைப் பண்ணை அமைக்க நீர்ப்பாசன வசதியுடன் கூடிய தகுந்த நிலம் இதுவரை கிடைக்காமையால் மூலிகைப் பண்ணை அமைக்கப்படவில்லை. இருப்பினும், மாவட்ட ஆட்சியரின் ஒத்துழைப்புடன் தகுந்த நிலத்தை கையகப்படுத்தி மூலிகைப் பண்ணை அமைக்க இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் வீரப்புலி ரிசர்விலும், மருத்துவா மலையிலும் பண்ணை அமைப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்று ஏற்கனவே இச்சட்டமன்றத்திலே சொல்லப்பட்டது. அங்கு அந்த மூலிகைப் பண்ணை அமைப்பதற்கு என்ன தடங்கல் ஏற்பட்டிருக்கிறது? அந்த இடத்திலே விரைவிலே அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட வீரப்புலி காப்புக்காட்டில் 40 ஹெக்டேர் நிலத்தில் பண்ணை அமைக்க இப்பொழுது அரசு முயற்சி எடுத்தது. ஆனால், மத்திய அரசு

வனப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அதைப் பயன்படுத்தக் கூடாது என்று தடுத்த காரணத்தால், அதனுள்ளே புகுந்து, கையகப்படுத்தி, பண்ணை அமைக்க இயலவில்லை.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மத்திய அரசே சித்த மருத்துவத்தை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளைத் தற்சமயம் எடுத்து வருகிறது. பாளையங்கோட்டை மருத்துவக் கல்லூரியிலே ரிசர்ச் ஏற்பாடுகளுக்கு விட்டுக் கொடுத்ததாக அமைச்சர் அவையில் சொன்னார். இந்தப் பின்னணியில் மூலிகைக்குத் தட்டுப்பாடு இருக்கிற இந்த நேரத்தில், மேலும் ஏற்றுமதிக்குத் தேவைப்படுகிற இந்த நேரத்தில், இந்த ரிசர்வ் இடத்தை இதற்காக ஒதுக்க மத்திய அரசை அணுகி அங்கே மூலிகைப் பண்ணை அமைக்க, அதை வளர வைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு பிரத்தியேகமாக எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு எழுதவில்லை. ஆனால், ஆட்சேபம் தெரிவித்த காரணத்தால், மாற்று இடம் தேடிக் கொண்டிருக்கிறார்கள். மாற்று இடம் கிடைத்தால் உடனே அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

தமிழ்நாட்டில் வேலை கிடைக்காத பல் வைத்தியர்கள்

570—(*வினா எண். 1111) திருமதி பா. **வளர்மதி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் வேலை கிடைக்காமல் இருக்கும் பல் வைத்தியர்கள் (Dentists) எவ்வளவு பேர்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு இயக்குநரகத்தில் 28—2—1987 வரையில் பதிவு செய்யப்பட்டுள்ள பல் வைத்தியர்கள் 31 பேர் ஆவர். இவர்களில் ஆண்கள் 24 பேர். பெண்கள் 7 பேர்.